இனிமையான குழந்தைகளே! அதிகாலையில் எழுந்து நினைவில் அமர்வதற்கான பயிற்சியை ஏற்படுத்துங்கள். உணவு உட்கொள்ளும்பொழுது கூட ஒருவருக்கொருவர் தந்தையின் நினைவை ஏற்படுத்துங்கள். நினைவு செய்ய செய்ய நீங்கள் மதிப்புடன் தேர்ச்சி பெற்றுவிடுவீர்கள் (பாஸ் வித் ஹானர்).

கேள்வி: எந்த ஒரு குறைபாட்டின் காரணத்தினால் குழந்தைகளுடைய புகார் தந்தையிடம் வருகிறது?

பதில்: சில குழந்தைகள் இப்பொழுதுவரை அன்பு சொரூபம் ஆகவில்லை. வாயிலிருந்து துக்கம் தரும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டே இருக்கின்றனர். ஆகையினால், தந்தையிடம் புகார் வருகின்றது. குழந்தைகள் மிகவும் அன்போடு நடந்துகொள்ள வேண்டும். ஒருவேளை தனக்குள்ளேயே ஏதாவது அவகுணம் என்ற பூதம் இருக்குமானால் பிறருடையதை எவ்வாறு நீக்குவீர்கள்? ஆகவே, தேவதை களைப் போல் அன்பு சொரூபம் ஆக வேண்டும், பூதத்தை நீக்கிவிட வேண்டும்.

பாடல்: கடைசியில் அந்த நாளும் இன்று வந்தது

ஓம்சாந்தி. ஏழைப்பங்காளரான தந்தையை குழந்தைகள் அறிந்துகொண்டீர்கள், மேலும், தந்தையின் நினைவில் அமர்ந்து இருக்கிறீர்கள். கண்கள் மூலம் யாரை வேண்டுமானாலும் காணுங்கள், கர்மேந்திரியங்கள் மூலம் கர்மம் (செயல்) கூட செய்யுங்கள். ஆனால், கரங்களால் கர்மம் செய்துகொண்டே இருங்கள், நாயகனிடம் உள்ளத்தை ஈடுபடுத்திக்கொண்டே இருங்கள் என்று மகிமை செய்யப்படுகிறது. பிராமண குல பூஷணர்களாகிய நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், மேலும், அரைக்கல்பமாக நீங்கள் தந்தையை நினைவு செய்தீர்கள், ஆகையினால் உங்களிடமே தந்தை உரையாடல் செய்கின்றார். சிருஷ்டிச் சக்கரம் எவ்வாறு சுழல்கிறது என்பதன் நினைவும் தந்தையின் நினைவும் நாடகத்தின் அனுசாரமாக இப்பொழுது உங்களுக்கு வந்திருக்கிறது. முழு உலகமும் மறதியில் உள்ளது. தந்தையின் படைப்பு மற்றும் தந்தையின் தூய்மையற்ற நிலையிலிருந்து (பதீதம்) தூய்மை யாக்கும் (பாவனம்) செயல் பற்றியும், அனைவருக்கும் சத்கதியை அளிக்கும் செயலைப் பற்றியும் எவரும் அறிந்திருக்கவில்லை. படைப்பாளர் மற்றும் படைப்பின் முதல், இடை, கடை நிலையைப் பற்றி நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். சிருஷ்டிச் சக்கரம் எவ்வாறு சுழல்கிறது? 84 பிறவிகளின் சக்கரத்தை நாம் எவ்வாறு சுற்றி வருகிறோம், யாரெல்லாம் சத்யுகத்திலிருந்து கலியுகத் தின் இறுதிவரை பாகம் ஏற்று நடித்தார்களோ, அவர்களே இப்பொழுதும் நடிப்பார்கள் போன்ற அனைத்தும் உங்களுக்கு நினைவு வந்துவிட்டது. சத்யுகத்திலிருந்து கலியுகம் வரை பிறவிகள் எடுத்து கீழே இறங்கி வந்துவிட்டோம். இப்பொழுது கலியுகத்தின் இறுதியில் உங்களுக்கு ஏறும் கலை ஆகும். உங்களது ஏறும் கலையினால் அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது என்று கூறுகின்றனர். எனவே, உங்களுக்கு அனைத்தும் நினைவு வந்துவிட்டது. இதையே நினைவு சொரூபம், நஷ்டோமோகா (பற்றற்ற நிலை) என்று கூறப்படுகிறது. யார் மூலம் நினைவு வந்திருக்கிறது? தந்தை மூலம். தானாக நினைவு வரவில்லை. நாம் ஆத்மாக்கள், பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த

சரீரமோ லௌகீக தந்தை அளித்தது. இந்த பழைய சரீரத்தின் உணர்வை விடுங்கள் என்று இப்பொழுது பரலௌகீக தந்தை கூறுகின்றார். எவ்வாறு நாகம் பழைய தோலை உரித்துவிட்டு புதியதை எடுக்கிறது அல்லவா! இந்த விசயம் சத்யுகத்திலிருந்து நடைபெறுகிறது. நீங்கள் கூட சத்யுகத்திலிருந்து தோலை (சரீரத்தை) விடுவதை ஆரம்பித்துவிடுவீர்கள். இப்பொழுது உங்களுடையது இறுதிப் பிறவி ஆகும். மீதம் கொஞ்ச சமயமே உள்ளது என்று தந்தை கூறுகின்றார். உங்களுக்கு தைரியம் கிடைத்திருக்கிறது. நாம் மீண்டும் தந்தை மூலம் சுகத்தின் ஆஸ்தியை அடைந்துகொண்டு இருக்கிறோம் என்ற குஷியில் நீங்கள் இருக்கிறீர்கள். சுகத்தின் ஆஸ்தி தந்தை மூலம் கிடைக்கும் அல்லவா! இந்த விசயம் எந்த மனிதர்களின் புத்தியிலும் வருவதில்லை. அவர்கள் இலட்சுமி, நாராயணர் கோவிலுக்கு சென்றார்கள் என்றாலும் இவர்கள் யார் என்பது அவர்களின் புத்தியில் வராது. தாயும், தந்தையும் நீங்கள் என்று பக்தி மார்க்கத்தில் கரங்கள் கூப்பிப் பாடுகின்றனர். சிவபாபா அனைவரையும் விட பெரியவர் (உயர்ந்தவர்) ஆவார். சிவபாபா தோட்டக்காரராகவும் இருக்கின்றார். ஏனெனில், புதிய தெய்வீக தோட்டத்திற்கான நாற்று நடுகின்றார். அவர் தோட்டத்தின் சொந்தக்காரராகவும் இருக்கின்றார், மேலும், கரத்தைப் பிடித்துக்கொண்டு உடன் அழைத்துச் செல்கின்றார். எனவே, எவ்வாறு பாபா தோட்டத்தின் உரிமையாளர், தோட்டக்காரர் மற்றும் படகோட்டியாக இருக்கின்றார் என்பது அனைத்தையும் குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே அறிவீர் கள். இவை அனைத்தும் அவரின் அனேகப் பெயர்கள் ஆகும். அவரை விடுவிப்பவர் என்றும் கூறு கின்றனர். நினைவு கூட அவரையே செய்ய வேண்டும். இங்கே வருகிறீர்கள் என்றால் சிவபாபாவை நினைத்துக் கொண்டு வாருங்கள் என்று பாபா கூறுகின்றார். நாம் சிவபாபாவை தன்னுடையவர் ஆக்கியிருக்கிறோம். பிரம்மாவும் அவரைத் தன்னுடையவர் ஆக்கியிருக்கின்றார். எனவே, நாம் அவரை மட்டும் ஏன் நினைவு செய்யக் கூடாது? அனைவரும் சிவனை ஏற்றுக்கொள்கின்றனர் என்பது சித்திரத்தில் கூட காண்பிக்கப்பட்டுள்ளது. பாபா ஆத்மாக்களுடன் உரையாடிக்கொண்டு இருக்கின்றார். ஆத்மா என்று கூறாமல் ஜீவாத்மா என்று கூறலாம். ஏனெனில், ஆத்மா தனியாக இருக்கும்பொழுது அதனால் பேச முடியாது. சரீரம் இல்லாமல் ஆத்மா, ஆத்மாவுடன் பேசுவதில்லை. பரந்தாமத்தில் பரமாத்மா ஆத்மாவுடன் பேசுகின்றாரா என்ன? கிறிஸ்துவை பரமாத்மா அனுப்பிவைத்தார் என்று கூறுகின்றனர். ஆனால், அங்கே பரமாத்மா பேசுவதில்லை, அங்கே சமிக்ஞை செய்வது கூட கிடையாது. நாடகத்தின் அனுசாரமாக ஆத்மா தானாகவே நடிப்பு நடிப்பதற்காக கீழே வந்துவிடுகிறது. ஆத்மாவில், அது ஏற்று நடிக்கும் பாகம் பதிவாகி உள்ளது. எனவே, ஆத்மா கீழே வந்து சரீரத்தை தாரணை செய்து நடிப்பை நடிக்கிறது. அனைவருடைய சரீரத்தின் பெயர் வெவ்வேறானது. ஆத்மாவின் பெயரோ ஆத்மா என்பது மட்டும் தான். ஆத்மாக்களாகிய நாம் ஒரு சரீரத்தை விடுத்து, மற்றொன்றை எடுத்து நடிப்பு நடிக்கின்றோம். இப்பொழுது நமக்கு நினைவு வந்துவிட்டது. வேறு எவருடைய நினைவும் இருக்கக் கூடாது. ஏனெனில், பழைய உலகில் பழைய நடிப்பு, பழைய சரீரத்தை விடுத்து புதிய உலகிற்குச் செல்ல வேண்டும். அங்கே நமக்கு புதிய சரீரம் கிடைக்கப்போகிறது. இதன் மூலம் வெளிப்படும் கருத்து என்னவென்றால் இப்பொழுது 5 விகாரங்களை விட வேண்டும். இது எவ்வளவு கடினமானதாக உள்ளது!

பாருங்கள்! காமம், கோபத்தின் புயல் வருகிறது என்று குழந்தைகள்

எழுதுகின்றனர். எனவே, தானம் கொடுத்து விடுங்கள், அப்பொழுது உங்களது கிரஹணம் விலகிவிடும் என்று பாபா கூறுகின்றார். இந்த சமயத்தில் ஆத்மா மீது கிரஹணம் பிடித்துள்ளது. முதலில் நீங்கள் 16 கலைகள் சம்பூரணமாக இருந்தீர்கள், இப்பொழுது எந்தக் கலையும் இல்லை. எவ்வாறு சந்திரனும் கூட பௌர்ணமிக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கலைகள் குறைந்துவிடுகிறது. இறுதியில் சிறிய கோடு மட்டும் மிஞ்சியிருக் கும். இப்பொழுது உங்களுடைய நிலையும் அத்தகையதாகவே உள்ளது. தானம் கொடுங்கள், கிரஹணம் நீங்கிவிடும் என்று பாபா கூறுகின்றார். ஒருவேளை, விகாரங்களை தானம் கொடுத்து விட்டு பிறகு திரும்பப் பெற்றால் உயர் பதவி அடைய முடியாது. இங்கே விகாரங்களை விட வேண்டிய விசயம் மட்டுமே உள்ளது. பணத்திற்கான விசயம் கிடையாது. அரிச்சந்திரனின் உதாரணம் உள்ளது பணத்தை தானமாகக் கொடுத்துவிட்டு திரும்பப் பெறக் கூடாது. உண்மையில் அது விகாரங்களை தானம் அளிக்கும் விசயம் ஆகும். விகாரத்தை தானமாகக் கொடுத்துவிட்டு திரும்பப் பெறக் கூடாது. யார் மூலம் நம்முடைய ஜென்ம ஜென்மங்களாகப் பிடித்திருந்த கிரஹணம் விலகியதோ, அந்த பாபா விடம் எனது உள்ளம் ஈடுபட்டு இருக்கிறதா என்று உள்ளத்தைப் பார்த்துக்கொண்டே இருங்கள். என்ன கர்மவினை எஞ்சியுள்ளதோ, அதன் அடையாளம் நோய்கள் ஆகும். புயல் வருகிறது என்றால் அதற்குக் காரணம் முழுமையான நினைவு இல்லை என்பதாகும். மற்ற தொடர்பை துண்டித்துவிட்டு என் ஒருவருடன் தொடர்பை இணைத்துக் கொள்ளுங்கள் என்று தந்தை கூறுகின்றார். மற்ற சத்சங்கங்களில் நாயகனைப் பற்றி தெரியாது. ஆத்மாவில் 84 பிறவிகளின் அழிவில்லாத நடிப்பு பதிவாகி உள்ளது என்பதும் தெரியாது. முதலில் நமது புத்தியில் கூட இல்லாமல் இருந்தது எனில், பிறரது புத்தியில் எவ்வாறு இருக்கும்! நாம் தேவதை குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தோம் என்பதைக் கூட அறியாமல் இருந்தோம். நாம் பிராமணர்களாக இருக்கிறோம், பிறகு, சத்யுகத்தில் பிராப்தி ஆரம்பமாகிவிடும்; பிறகு, ஒவ்வொருவரும் சத்யுத்தில் என்ன கர்மம் செய்தோமோ அதையே திரும்பச் செய்வோம் என்பது இப்பொழுது உங்களுக்கு நினைவு வந்து விட்டது. சமஸ்காரம் வெளிப்பட்டுக் (எமர்ஜ்) கொண்டே இருக்கும். ஞானக்கடல், அன்புக்கடல் என்று பாபாவின் மகிமையைப் பாடுகின்றனர் எனில், நாம் கூட அன்பை கற்றுக்கொண்டு இருக்கிறோம். ஒருவருக்கு துக்கம் கிடைக்கும்படியான வார்த்தை நமது வாயில் இருந்து வெளிவரக் கூடாது. ஒருவேளை, ஒருவருக்கு துக்கம் கொடுத்தீர்கள் என்றால் தனக்குள் பூதம் உள்ளது என்று புரிந்துகொள்ள வேண்டும். பிறகு, இலட்சுமியை வரன் முடிக்க இயலாது. தந்தையினுடையவர் ஆகியிருக்கிறீர்கள் எனில் இலட்சுமியை மணக்கத் தகுதியானவர் ஆகவேண்டும். ஒருவேளை, ஏதாவது பூதம் தங்கிவிட்டது என்றால் திரேதாயுகத்திற்குச் சென்றுவிடுவீர்கள். குழந்தைகளுக்குள் கோபம் இருக்கக்கூடாது. மிக அன்போடு நடந்துகொள்ள வேண்டும். பாருங்கள், பாபாவிற்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர்! ஆனாலும் கூட பாபா கோபப்படுவதில்லை. எனவே, நீங்களும் கூட மிகவும் அன்பு சொரூபம் ஆக வேண்டும். இப்பொழுது சில குழந்தைகள் அன்பு சொரூபம் ஆகவில்லை. அவ்வப்போது புகார் வருகின்றது. இவருக்குள் பூதம் உள்ளது என்று அவரும் புரிந்துகொள்கின்றார். யாருக்குள் பூதம் உள்ளதோ, அவர் பிறரிடம் உள்ள பூதத்தை எவ்வாறு நீக்குவார்? மிகவும் அன்பு சொரூபம் ஆகவேண்டும், மேலும், இங்கேயே ஆகவேண்டும். தேவதைகள் அன்பு சொரூபமாக உள்ளனர் அல்லவா! பாருங்கள், இலட்சுமி, நாராயணருடைய

சித்திரம் எவ்வளவு ஈர்க்கிறது!. எனவே, நாமும் கூட அவ்வாறு ஆகவேண்டும். உங்கள் மீது பதி (கணவர்) கோபம் கொள்கிறார் என்றாலும் கூட அன்போடு பேச வேண்டும். அவருக்குள் பூதம் உள்ளது, அது எனக்குள்ளும் வந்துவிட்டது என்பது கூடாது. .இல்லை. எனக்குள் என்னென்ன அவகுணங்கள் உள்ளனவோ, அந்த அவகுணங்களை எவ்வாறேனும் நீக்கவேண்டும். மிக மிக இனிமையானவர் ஆகவேண்டும். லௌகீக தந்தை கோபப்படுகிறார் என்று ஒருவர் கூறினார். அவர் கோபப்படும்பொழுது நீங்கள் நல்ல நல்ல மலர்களைத் தூவுங்கள் என்று நான் கூறினேன். அவ்வாறு செய்தால் அவர் ஆச்சரியம் கொள்வார், பிறகு, அவர் குளிர்ந்து விடுவார். மிகவும் யுக்தியுடன் புரியவைக்க வேண்டும். ஏனெனில், இது இராவண இராஜ்யம் அல்லவா! நாம் இராம சம்பிரதாயத்தினர் ஆவோம். நாம் ஆகவில்லை எனில் பிறரை என்ன உருவாக்குவோம்? ஆகையினாலேயே, ஸ்தாபனை காரியத்தில் தாமதம் ஆகிறது. ஒன்று அன்போடு நடந்துகொள்ள வேண்டும். இரண்டாவது நினைவில் இருக்க வேண்டும், சுயதரிசன சக்கரதாரி ஆகவேண்டும். தொழில் செய்து தான் ஆக வேண்டும். ஆகையினால், காலை நேரம் மிக நல்ல நேரம் ஆகும். சீக்கிரம் தூங்கவேண்டும், சீக்கிரம் எழவேண்டும் என்று கூறுகின்றனர் அல்லவா! ஆகையினால், அதிகாலையில் எழுந்து இங்கு வந்து அமர்ந்துகொண்டீர்கள் என்றால் 5 நிமிடம் கூட நினைவு நிலைத்துவிடும். பிறகு, மெதுவாக பழக்கம் ஏற்பட்டவுடன் நினைவு உறுதியாகிவிடும் (பக்கா ஆகிவிடும்). நல்லது, உணவு உட்கொள்ளும்பொழுது எவ்வளவு நேரம் பாபாவின் நினைவில் சாப்பிட்டேன் என்பதைப் பாருங்கள். ஒருவேளை, முழு நேரமும் நினைவு செய்திருந்தீர்கள் என்றால் அது கூட மிகவும் வீரமான செயல் ஆகும். தந்தையை நினைவு செய்யுங்கள் என்று உணவு உட்கொள்ளும் பொழுது ஒருவருக்கொருவர் சமிக்ஞை கொடுக்க வேண்டும். ஒரு ஒரு வாய்க்கும் (கவளத்திற்கும்) நினைவை ஏற்படுத்துங்கள். நம்முடையதோ சகஜயோகம் ஆகும். இப்பொழுது புத்தியில் ஞானம் வந்துவிட்டது. பரமபிதா பரமாத்மாவை சர்வசக்திவான் என்று கூறுகின்றனர் எனில் அவரிடம் என்ன சக்தி உள்ளது? அணுகுண்டுகளை உருவாக்கும் சக்தி உள்ளது என்பது கிடையாது. இல்லை, அவரை நினைவு செய்வதன் மூலம் விகர்மங்கள் வினாசம் ஆகிவிடுகின்றன. இது சக்தி ஆகும் அல்லவா! பாருங்கள், எவ்வளவு கள்ளமற்றவர் ஆனால், சக்தி எவ்வளவு உள்ளது! சரியான முறையில் நினைவு செய்வதற்கு அதிக முயற்சி செய்யவேண்டியதாக உள்ளது அல்லவா! எனவே, அதிக முயற்சி செய்ய வேண்டும். அதிகாலை நேரம் நன்றாக உள்ளது. பக்தியில் கூட அதிகாலையில் எழுகின்றனர், ஞானத்திலும் கூட அதிகாலை நேரம் மிக நல்ல நேரம் ஆகும். உங்களை உடன் அழைத்துச் செல்வதற்காக நான் கல்பத்தில் ஒருமுறை மட்டும் வருகின்றேன் எனில் குஷி குஷியாகச் செல்ல வேண்டும் என்று தந்தை கூறுகின்றார். துக்கதாமத்திலிருந்து வெளியில் வர வேண்டும். அத்தகைய நினைவு இருந்ததென்றால் பயப்படமாட்டீர்கள். எத்தனை தான் பரீட்சைகள் வந்தாலும் கூட உறுதியாக இருக்க வேண்டும். அத்தகைய மனோநிலையை உருவாக்க வேண்டும். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்கு நானே அது, அதுவே நான் என்பதன் அர்த்தம் கூட புரியவைக்கப்பட்டு இருக்கிறது. நானே பரமாத்மா என்பது அல்ல. ஆனால், பரமாத்மாவின் குழந்தை ஆவேன். நானே அது என்ற சக்கரத்தின் ஞானம் இது ஆகிவிட்டது. இந்த நினைவின் மூலம் தான் அழுக்கு வெளியேறும். அழுக்கை வெளியேற்றுவதற்கான நேரமே அமிர்தவேளை நேரம் ஆகும். எனவே, மதிப்புடன் தேர்ச்சி பெற்றவர் ஆகுவதற்காக கிருஷ்ணபுரியின் எஜமானர் ஆக்கக்கூடிய தந்தையை நினைவு

செய்ய வேண்டும். நல்லது!

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. தொழில் போன்றவை செய்தாலும் சுயதரிசன சக்கரதாரியாகி இருக்க வேண்டும். ஒருவருக் கொருவர் தந்தையின் நினைவை ஏற்படுத்த வேண்டும். எத்தனை பரீட்சைகள் வந்தாலும் கூட நினைவில் அவசியம் இருக்க வேண்டும்.

2. விகாரங்களை தானம் கொடுத்த பிறகு ஒருபொழுதும் திரும்பப் பெறக்கூடாது. யாருக்கும் துக்கம் கொடுக்கக்கூடாது. கோபப்படக்கூடாது. உள்ளுக்குள்ளே என்ன பூதம் உள்ளதோ அதை நீக்கிவிட வேண்டும்.

வரதானம்: ஏஜமானன் என்ற நினைவு மூலம் பிறர் வசத்தில் இருக்கும் நிலையை (பரவசம்) முடிவடையச் செய்யக்கூடிய சதா சக்திசாலியானவர் ஆகுக.

யார் சதா எஜமானன் என்ற நினைவில் நிலைத்து இருக்கின்றார்களோ, அவர்களுடைய எண்ணம் கட்டளைப்படி நடக்கும். மனமானது எஜமானனை பிறர் வசம் ஆக்கமுடியாது. பிராமண ஆத்மா ஒருபொழுதும் தன்னுடைய பலவீனமான சுபாவ சமஸ்காரத்திற்கு வசமாக முடியாது. எப்பொழுது சுபாவம் என்ற வார்த்தை முன்னால் வருகிறதோ, அப்பொழுது சுபாவம் என்றால் சுயத்திற்காக மற்றும் அனைவருக்காக ஆன்மிக பாவ் (உணர்வு) கொண்டிருப்பது, இந்த சிரேஷ்டமான அர்த்தத்தில் நிலைத்துவிடுங்கள் மற்றும் எப்பொழுது சமஸ்காரம் என்ற வார்த்தை வருகிறதோ, அப்பொழுது தன்னுடைய அனாதி மற்றும் ஆதி சமஸ்காரங்களை நினைவில் கொண்டு வாருங்கள், அப்பொழுது சக்திசாலி ஆகிவிடுவீர்கள். பிறர் வசமாகும் நிலை முடிவடைந்துவிடும்.

சுலோகன்: வரதானங்களின் சக்தியை சேமிப்பு செய்துகொள்ளுங்கள், அப்பொழுது பிரச்சனை என்ற நெருப்பு கூட தண்ணீராக ஆகிவிடும்

மாதேஷ்வரி அவர்களின் விலைமதிப்பற்ற மகாவாக்கியம்

1. துரதிர்ஷ்டம் மற்றும் அதிர்ஷ்டம், இப்பொழுது இந்த இரண்டு வார்த்தைகளின் ஆதாரம் எது? அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர் பரமாத்மா மற்றும் துரதிர்ஷ்டத்தை உருவாக்குபவர் சுயம் மனிதனே என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். எப்பொழுது மனிதர்கள் சதா சுகமானவர்களாக இருக்கின்றார் களோ, அப்பொழுது அவர்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் உள்ளது என்று சொல்கின்றார்கள் மற்றும் எப்பொழுது மனிதர்கள் தங்களை துக்கமானவர்களாக நினைக்கின்றார்களோ, அப்பொழுது அவர்கள் தங்களை துரதிர்ஷ்டசாலி என்று நினைக்கின்றார்கள். துரதிர்ஷ்டம் அல்லது அதிர்ஷ்டம் பரமாத்மா மூலமாகக் கிடைக்கிறது என்று நாம் சொல்ல முடியாது. இவ்வாறு நினைப்பது பெரிய முட்டாள்தனம் ஆகும். பரமாத்மாவோ நம்மை

அதிர்ஷ்டசாலி ஆக்குகின்றார், ஆனால், அதிர்ஷ்டத்தைக் கெடுப்பதோ அல்லது உருவாக்குவதோ அனைவருடைய கர்மங்களின் ஆதாரத்திலேயே உள்ளது. இவை அனைத்தும் மனிதர்களுடைய சமஸ்காரங்களின் ஆதாரத்திலேயே உள்ளது. பிறகு, எவ்வாறு பாவம் மற்றும் புண்ணியத்தின் சமஸ்காரம் உருவாகிறதோ, அதற்கேற்றார்போல் அதிர்ஷ்டம் உருவாகிறது. ஆனால், மனிதர்கள் இந்த இரகசியத்தை அறியாத காரணத்தினால் பரமாத்மா மீது குற்றம் சுமத்து கிறார்கள். இப்பொழுது பாருங்கள், மனிதர்கள் தங்களை சுகமாக வைத்துக் கொள்வதற்காக எத்தனை மாயையினுடைய வழிகளை உருவாக்குகின்றார்கள். பிறகு, அதே மாயையினால் சிலர் தன்னை சுகமாக இருப்பதாக நினைக்கிறார்கள் மற்றும் சிலர் அதே மாயையை சந்நியாசம் செய்து மாயையை விட்டுவிடுவதால் தான் சுகமாக இருப்பதாக நினைக்கின்றார்கள், அதாவது அனேக விதமாக முயற்சி செய்கின்றார்கள், ஆனால், இத்தனை வழிகளை பயன்படுத்திய பொழுதும் ரிசல்ட் துக்கத்தை நோக்கியே செல்கின்றது. எப்பொழுது சிருஷ்டியில் அதிகமான துக்கம் உள்ளதோ, அப்பொழுது அதே சமயத்தில் சுயம் பரமாத்மா வந்து மறைமுகமாக தன்னுடைய ஈஸ்வரிய யோக சக்தியால் தெய்வீக சிருஷ்டியை ஸ்தாபனை செய்வித்து அனைத்து மனித ஆத்மாக்களையும் அதிர்ஷ்டசாலியாக ஆக்குகின்றார்.

எந்த சமயம் ஓம்சாந்தி என்று சொல்கின்றோமோ, அப்பொழுது அதன் யதார்த்த அர்த்தம் என்னவென்றால் நான் ஆத்மா சாலிக்கிராம், அந்த ஜோதி சொரூப பரமாத்மாவின் குழந்தை, நானும் அதே பிதா ஜோதிர் பிந்து பரமாத்மாவைப் போல் ஒளி சொரூபமானவர் என்பதாகும். மற்றபடி சாலிக்கிராம்களாகிய நாம் குழந்தைகள் ஆவோம். நாம் நம்முடைய ஜோதி சொரூப பரமாத்மாவிடம் யோகத்தை இணைக்க வேண்டும் மற்றும் ஒளி, சக்தியின் ஆஸ்தியைப் பெற வேண்டும். அந்த நிராகார பரமாத்மாவை சுவாச சுவாசத்திலும் நினைவு செய்ய வேண்டும், இதையே இடைவிடாத தொடர் நினைவு என்று சொல்லப்படுகிறது. இடைவிடாத தொடர் நினைவு என்றால் எந்தவொரு மந்திரத்தை யும் ஜெபிப்பதற்கு பதிலாக இயற்கையாக அந்த பரமாத்மாவின் நினைவில் இருப்பதாகும். இதையே பூரணமான யோகம் என்று சொல்கின்றோம். யோகம் என்றால் ஒரேயொரு யோகேஸ்வரன் பரமாத்மாவின் நினைவில் இருப்பது. எந்த ஆத்மாக்கள் அந்த பரமாத்மாவின் நினைவில் இருக் கின்றார்களோ, அவர்களை யோகி அல்லது யோகினி என்று சொல்லப்படுகிறது. எப்பொழுது அந்த யோகம் அதாவது நினைவில் நிரந்தரமாக இருக்கின்றோமோ, அப்பொழுதே விகர்மங்கள் மற்றும் பாவங்களின் சுமை அழிகிறது மற்றும் ஆத்மாக்கள் தூய்மையாகி எதிர்கால பிறவியில் தேவதை என்ற பிராப்தியை அடைகின்றார்கள். இப்பொழுது இந்த ஞானம் தேவை. இந்த ஞானத்தின் மூலமே யோகா முழுமையாக இணைய முடியும். எனவே, தன்னை ஆத்மா எனப் புரிந்து பரமாத்மாவின் நினைவில் இருக்க வேண்டும், இதுவே உண்மையான ஞானம் ஆகும். நல்லது. ஓம்சாந்தி.